TAMIL NADU LEGISLATURE LIBRARY
28 JUL 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1972 மார்ச் 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம்

*2. குறுகிய கால வினா—திரு. ஆர். பொன்னப்ப நாடார் : } மாண்புமிகு
திரு. கா. மு. கதிரவன் : }
அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னர் மானியம் சலுகைகள் ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அது செயல்படுத்தப்பட்ட பின்னரும் கூட திருவாங்கூர் மகாராஜாவினால் கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டவர் இன்னும் தொடர்ந்து உறுப்பினராக இருந்து வருகிறாரா?

(இ) இது குறித்து அரசு பரிசீலித்துள்ளதா?

(உ) ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) முதல் (எ) வரை : இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான தேவஸ்வம் போர்டாக இருக்கிற காரணத்தினால் விரைவிலே பரிசீலனை செய்து அதற்கு ஒரு முடிவு சீக்கிரம் ஏற்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்த மாதம் 2-3-72 அன்று இது பற்றி அதிகாரிகளையெல்லாம் அழைத்து வைத்து பேசப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே திருவாங்கூர் மகாராஜாவுக்கு இருக்கிற உரிமைகளை வைத்துத்தான் அவர் நியமிக்கிற ஒரு நபரையும் சேர்த்து, தமிழ்

[1972 மார்ச் 15

நாடு அரசாங்கம் நியமிக்கின்ற இரண்டு பேர்களையும் சேர்த்து தேவஸ்வம் போர்டு ஏற்படுத்தப்படுகிறது. மகாராஜாக்களுக்குள்ள உரிமைகளை அவர்கள் இழந்துவிட்ட காரணத்தினால், இப்படிப்பட்ட உரிமைகளும் இழக்கப்படுமா என்பதைப்பற்றி சட்டத்துறையினர் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். வெகு விரைவிலே நல்ல முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்திற்கு வந்த பிறகும் கூட இன்னும் தேவஸ்வம் போர்டுக்கு அந்த அரசினுடைய பிரதிநிதி ஒருவர் இருக்க வேண்டியது அவசியம் தானா, அதற்கு நாம் ஒரு முடிவு எடுத்து, அதை கேரள அரசுக்கு அனுப்ப முடியாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அது கேரளாவிலிருந்து தமிழ்நாடு பிரியும்பொழுது சட்டப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அதனால் தான் திருவாங்கூர் மகாராஜாவுக்கு இருக்கிற உரிமைகளின் காரணமாக நாம் ஒரு மெம்பரை நியமித்துக்கொண்டிருக்கிறோம். அப்படி நியமிக்காமல் தமிழ்நாடு அரசு நியமிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இப்பொழுது நாம் அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எப்பொழுதுமே இப்படி நியமனம் செய்யப்படுகிற உறுப்பினர் ஜாதி இந்துக்களாக இருக்கிறார்கள். ஆதலால், இனியாவது பிற்பட்ட வகுப்பினர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் இதிலே இடம் பெறுவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, இந்துக்களை யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்ற கொள்கையை கடைப்பிடித்துக் கொண்டு வருகிறோம். மற்ற ஆலய அறங்காவலரை நியமித்துக் கொண்டிருக்கிறோமே, அதைப் போலவே தாழ்த்தப்பட்டவர்களை நியமிப்பதில் எந்தவிதமான மறுப்பும் இல்லை

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, வருகிற மூன்று ஆண்டுகளுக்கு நியமனம் இப்பொழுதே செய்யவேண்டுமென்று நினைக்கிறேன். ஆகவே, இன்னும் இதனைக் காலம் கடத்தினால் மகாராஜா வேதஸ்வம் போர்டுக்கு நியமித்தாலும், இந்த அரசு நியமித்தாலும், கஷ்டங்கள் ஏற்படும். ஆகவே, உடனடியாக சீக்கிரம் இதுபற்றி முடிவு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

1972 மார்ச் 15]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏற்கெனவே உள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் மார்ச் மாதம் முடிவடைய இருக்கிறது. அடுத்த பதவி காலத்திற்கு உறுப்பினர்கள் இதிலே அங்கம் வகிப்பதற்கு உரிமை இருக்கிறது. ஆகவே, விரைவிலே இதுபற்றி அரசாங்கம் முடிவு எடுக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மகாராஜாவினுல் நியமிக்கப்பட்ட இந்த உறுப்பினர் தொடர்ந்து எத்தனை ஆண்டுகளாக இருந்து வருகிருர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த மூன்று ஆண்டு காலமாக தொடர்ந்து இருந்து வருகிருர்.

திரு. நா. வீராசாமி : மன்னர் மானிய ஒழிப்பு சட்டப்படி மகாராஜக்களின் உரிமைகள் ஒழிக்கப்பட்டுவிட்டன. இப்பொழுது மகாராஜா நியமிக்கின்ருர்களா, அல்லது இந்த அரசாங்கம் நியமித்துக் கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மகாராஜா சிபாரிசு செய்கின்ற உறுப்பினரைத்தான் நியமித்துக்கொண்டிருக்கிருேம். மன்னர்களின் உரிமைகள் ஒழிக்கப்பட்டு விட்ட காரணத்தினுல், இதுவும் ஒழிக்கப்படவேண்டும் என்றுதான் சட்டப்படி ஒழிக்கப்படுவதற்கு நடைமுறையில் இடம் இருக்கிறதா, விதிமுறையில் இடம் இருக்கிறதா என்பதை நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிருேம்.

Board of Education

* 496 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the executive board of the Tamil Nadu Asiriar Sangam requested the Government on 9th May 1971 to constitute an antonomus Board of Education with representatives of teachers Association and to formulate and maintain standard curriculum and supervise the working of schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி மே 9-ம் தேதியன்று தமிழ்நாடு ஆசிரியர்கள் சங்கம் கேட்டுக்கொண்டார்களே, ஒரு அடானமஸ் போர்டு அமைக்கவேண்டு மென்று, அதற்கு அரசாங்கத்தினுடைய பதில் என்ன, அரசு என்ன முடிவு செய்திருக்கிருர்கள்?